# செனவாங் விற்பனை மையத் திட்டம் ரத்து

கோலாலம்பூர்,. ஜூலை 30-

நெகிரி செம்பிலானின் செனவாங் பகுதியில் இரேக்கா கோர்ப்பரேஷன் பெர்ஹாட் நிறுவனமும் ஏயோன் கம்பெனி பெர்ஹாட்டும் விற்பனை மையமொன்றை அமைக்கத் திட்டமிட்டிருந்தன. ஆனால், அத்திட்டம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக அவை தெரிவித்தன.

சுமார் 20 ஏக்கர் அந்த மையத்தை அமைப்பதற்கு அந்நிறுவனங்கள் திட்டமிட்டிருந்தன. சம்பந்தப்பட்ட நிலத்தைக் கொள்முதல் செய்வதற்கான திட்டத்தில் அந்நிறுவனங்கள் கையெழுத்திட்டிருந்த போதிலும் அத்திட்டம் ரத்து செய்யப்பட்டுள்ளது. அதற்கு என்ன காரணம் என்பது தெரியவில்லை.